ஆ)மொழிபெயர்க்க.

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we staycalm."

41.பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ்பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக.

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குஓர்
சயங்கொண்டான் விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காசு
அலாதொருவர் பகர ஒணா

42.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி-5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 ×8 = 24

43.அ)மொழியிலும்இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளைவிளக்குக.

(அல்லது)

ஆ)தமிழ்நாட்டுச்சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப்பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

44.அ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

(அல்லது)

ஆ)மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச்செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45.அ)பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – சாலை விதிகள் – சாலைப்பாதுகாப்பு – எச்சரிக்கை விளக்குகள்– ஓட்டுநர் விதிகள் –முடிவுரை

(அல்லது)

ஆ)முன்னுரை –பயண முன்னேற்பாடு –பார்த்த இடங்கள் – இடங்களின் சிறப்பு – முடிவுரை

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா,ஈரோடு.



**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு**

**இரண்டாம் திருப்புதல் தேர்வு-2023**

**ஒன்பதாம் வகுப்பு – தமிழ்**

**காலம் 2.30 மணி** **மதிப்பெண் 100**

## பகுதி-1(மதிப்பெண் 15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1.'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி
அ.குறிஞ்சி ஆ.நெய்தல் இ.முல்லை ஈ.பாலை

2.மரவேர் என்பது -------- புணர்ச்சி
அ.இயல்பு ஆ.திரிதல் இ.தோன்றல் ஈ.கெடுதல்

3.இந்திய தேசிய இராணுவம் ------இன் தலைமையில் ------ உருவாக்கினார்
அ.சுபாஷ் சந்திரபோஸ் , இந்தியர் ஆ. சுபாஷ் சந்திரபோஸ்,ஜப்பானியர்
இ.மோகன்சிங் ,ஜப்பானியர் ஈ.மோகன்சிங் ,இந்தியர்

4.வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?
அ.மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.
ஆ.வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.
இ.செறிவான வயலில் உழவர் வெள்ளமாய் கூடியிருந்தனர்
ஈ.பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.

5.சொல்லும் பொருளும் பொருந்தி வந்துள்ளது எது?
அ.வருக்கை – இருக்கை ஆ.புள் – தாவரம் இ.அள்ளல் – சேறு ஈ.மடிவு – தொடக்கம்

**6.சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**கூற்று** – பெரியார் உயிர்எழுத்துக்களில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும்,'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

**காரணம்** – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ. கூற்று சரி , காரணம் தவறு ஆ.கூற்று காரணம் சரி
இ. கூற்று , காரணம் தவறு ஈ.கூற்று தவறு , காரணம் சரி

7.முண்டிமோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது
அ.மகிழ்ச்சி ஆ.வியப்பு இ.துணிவு ஈ.மருட்சி

**8.விடைக்கேற்ற வினா அமைக்க.**

**விடை : பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகின்றது.**

அ.பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகின்றது?
ஆ.பானை எப்படி நமக்குப் பயன்படுகின்றது?
இ.பானை எதனால் நமக்கப் பயன்படுகின்றது?
ஈ.பானை எங்கு நமக்குப் பயன்படுகின்றது?

9.'ஞானம்' என்பதன் பொருள் யாது?
அ.தானம் ஆ.தெளிவு இ.சினம் ஈ.அறிவு

10.கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி
அ.சொல் பின்வருநிலையணி ஆ.பொருள் பின்வருநிலையணி
இ.சொற்பொருள் பின்வருநிலையணி ஈ.வஞ்சப்புகழ்ச்சியணி

11.யாமரம் எந்நிலத்தில் வளரும்?
அ.குறிஞ்சி ஆ.மருதம் இ.பாலை ஈ.நெய்தல்

www.Padasalai.Net

**பாடலைப் படித்து வினாக்களுக்க விடையளித்தல்.(12-15)**

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்த்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே!

12.இப்பாடலடி இடம்பெறும் நூல் எது? அ.முத்தொள்ளாயிரம் ஆ.சீவகசிந்தாமணி இ.இராவணகாவியம் ஈ.நாச்சியார் திருமொழி

13.இப்பாடலடியைப் பாடியவர் யார்?
அ.திருத்தக்கதேவர் ஆ.புலவர் குழந்தை இ.மாங்குடி மருதனார் ஈ.பெருங்கடுங்கோ

14.இப்பாடலில் இடம்பெறும் அடிஎதுகை எது?
அ.ஏமாங்கதம்-காய்மாண்ட ஆ.பூமாண்ட-தேமாங்கனி இ.சிதறி-சிந்தும் ஈ.சிதறி-சிந்தி

15.வருக்கை என்பதன் பொருள் யாது? அ.தேங்காய் ஆ.புகழ் இ.உச்சி ஈ.பலாப்பழம்

**பகுதி-2(மதிப்பெண் 18)**

**பிரிவு-1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4× 2 = 8**

**(வினா எண் 21 கட்டாயம் விடையளிக்க வேண்டும்)**

16.**விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ.விஜய நகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்பட்டன.
ஆ.பெரியார் என்றவுடன் நினைவுக்கு வருவது பகுத்தறிவு கொள்கை ஆகும்.

17.பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

18.இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழர்க்ள யாவர்?

19.கமுகு மரம் எதனைத் தேடியது?

20.தமிழ்ச்சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

21.சுழன்றும் எனத் தொடங்கும் திருக்குறள்.

**பிரிவு-2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5× 2 =10**

22. எழுத்துகளை முறைப்படுத்திச் சொற்றொடர்களைக் கண்டுபிடிக்க.
அ.தைக்விதுகபு ஆ.யனிநேம்தம

23.சொற்றொடர்களை அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.
அ.மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். (நேர்க்கூற்றாக மாற்றுக.)
ஆ.மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான்.
(பிறமொழிச்சொற்களைத் தமிழாக்குக.)

24.பகுபத உறுப்பிலக்கணம் தருக. “வேண்டி“

25.சொற்றொடர் உருவாக்குக.
அ.செந்தமிழும் சுவையும் போல ஆ.மழை முகம் காணாப் பயிர் போல

26.கலைச்சொல்லாக்கம் தருக. 1.Metaphor 2. Rhyme

27.தொகைச்சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்கி எழுதுக.
சேரர்,சோழர்,பாண்டிய அரசர்களிடம் யானைப்படை,குதிரைப்படை,தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன.அவர்கள் மா,பலா,வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர்.

28.மரபுப் பிழைநீக்கி எழுதுக.
அ.நேற்று தென்றல் காற்று அடித்தது. ஆ.அணில் பழம் சாப்பிட்டது.

**பிரிவு-3(மதிப்பெண் 18)**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 ×3= 6**

29.குறிப்பு வரைக- டோக்கியோ கேடட்ஸ்ல்

30.சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்பு படுத்தி எழுதுக.

31.பின்வரும் உரைப்பத்தியைப் படித்து விடையளிக்க.
அகத்திணை இலக்கியம் பல்வேறு வழிகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது.ஐவகை நிலங்களின் பெரும்பொழுது,சிறுபொழுது, கருப்பொருள் ஆகியவற்றைப் புலவரும் பாணரும் இலக்கியம் பல்வோரும் தவறாது கற்றுவந்தனர்.தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்த முறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

1.அகத்திணை இலக்கியம் எவற்றை வளர்த்தது?
2.உலகின் பிரிவாக அமைந்தது எது?
3.இவ்வுரைப் பத்திக்கேற்ற தலைப்பொன்று எழுதுக.

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2× 3= 6**

**(வினா எண் 34 கட்டாயம் விடையளிக்க வேண்டும்)**

32.இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

33.ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?

34.அ.ஆக்குவது எனத்தொடங்கும் யசோதர காவியப்பாடல். (அல்லது)
ஆ.அள்ளல் எனத்தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடல்.

**பிரிவு-3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2× 3= 6**

35.அலகிட்டு வாய்பாடு கூறுக.
ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

36.சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.

37.பண்பாகுபெயர்,தொழிலாகுபெயர் - விளக்குக.

பகுதி-4(மதிப்பெண் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25**

38.அ)இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரி.
(அல்லது)
ஆ)வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

39.அ)நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றிற்கு மதிப்புரை எழுதுக.
(அல்லது)
ஆ)நூலக வசதி வேண்டி நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.

40.அ)ஒரு நல்ல தோழனாக நண்பர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிடுக.

(அல்லது)



www.Padasalai.Net